pக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 28 திங்கட்கிழமை 17.10.2022 கதிர் 233

## தொல்லியல் திணைக்களத்தை வழிநடத்தும் பௌத்த பிக்குகள்

### சார்ள்ஸ் எம்.பி. சீற்றம்

வனஇலாகா, வனஜீவராசிகள், மகாவலி, தொல்பொருள் ஆகிய நான்கு திணைக்களங்களும் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. தொல்பொருள் திணைக்களத்தை ஒரு சில பௌத்த பிக்குகள்தான் வழிநடத்துகின்றனர். ☞8

# நிரந்தர அரசியல் தீர்வே தமிழர்களின் உயிர் மூச்சு



## முன்னாள் சபாநாயகர் கரு தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் போராலும் இடப்பெயர்வாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நிரந்தர அரசியல் தீர்வு விரைவில் வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளனர். அதுவே அவர்களின் உயிர் மூச்சாகவும் உள்ளது.

–இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். ☞2

## வவுனியாவில் குளவி கொட்டி 32 மாணவர்களும் 8 ஆசிரியர்களும் வைத்தியசாலையில் சிகிச்சை






(வவுனியா நிருபர்)

வவுனியா போகஸ்வெவ மகா வித்தியாலய பாடசாலையில் குளவி கொட்டுத் தாக்குதலுக் குள்ளாகி 32 மாணவர்களும் 8 ஆசிரியர்களும் வைத்தியசாலையில் ☞2


## கொழும்பு அரசியலில் பரபரப்பு ரணில் – பஸில் இரகசியப் பேச்சு

### தேர்தல் கூட்டணி தொடர்பில் ஆராய்வு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று தகவல்கள் ☞2

## மரத்துடன் மோதியது கார்; குழந்தை உட்பட மூவர் சாவு



அனுராதபுரம் - பாதெனிய வீதியின் ரிதிபதியெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று வயது குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று நாகொல்லாகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அனுராதபுரத்தில் இருந்து பாதெனிய நோக்கிப் பயணித்த கார் வீதிக்கு அருகில் உள்ள மரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ☞8

## திலினி பிரியமாலியுடன் தொடர்பு: சி.ஐ.டியில் ஆஜரான அஸாத் ஸாலி



மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ☞2

## சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலை கண்டித்து வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலைக் கண்டித்து பிரதேச செயலக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையுடன் கவனயீர்ப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் வவுனியா பிரதேச செயலக வாயிலின் முன்பாக இன்று முற்பகல் 11.30 மணி ☞8

## இலங்கையிலிருந்து மேலும் அறுவர் தமிழகத்தில் தஞ்சம்



இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இன்றும் 6 பேர் அகதிகளாகத் தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு வழியாகச் சென்றவர்கள் இந்தியாவின் ஆளுகையில் உள்ள 4 ஆம் திட்டில் தரை இறக்கி விடப்பட்டனர்.

அவர்களை அவதானித்த தமிழக மீனவர்கள் மறாயன் ☞2

## பெற்றோல், டீசலின் விலைகள் குறைப்பு




பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் இன்று இரவு 9 மணி முதல் ☞8

## மட்டு. முனைத்தீவு கிராமத்துக்குள் காட்டு யானை புகுந்து அட்டகாசம்!

### வயோதிபர் ஒருவர் மரணம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானை தாக்கி வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு-முனைத்தீவு கிராமத்துக்குள் ☞2

## நாவலப்பிட்டியில் மஹிந்தவை எதிர்த்த சஜித் அணியினர் 16 பேருக்கும் பிணை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பங்கேற்ற 'மொட்டு'க் கட்சியின் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாவலப்பிட்டி நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுத்த குற்றச்சாட்டின் கீழ் ☞8

## நிரந்தரத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்த கரு ஜயசூரிய, பல தரப்பினரையும் சந்தித்து தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தார். இது தொடர்பில் அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கண்டிருந்தால் கொடிய போரையும், இடப்பெயர்வுகளையும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சந்தித்திருக்கமாட்டார்கள் என்று யாழ்ப்பாணம் மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

சுபீட்சமான எதிர்காலம் நோக்கிய தேசிய ஒற்றுமைக்கான - ஐக்கியத்துக்கான - நல்லிணக்கத்துக்கான பயணத்தில் கைகோர்க்கத் தமிழ் மக்கள் தயாராகவுள்ளனர். ஐக்கியத்தை அவர்கள் விரும்புகின்றனர். இதை நான் வரவேற்கின்றேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் அதேவேளை, தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாகவுள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினையால் மூண்ட போர்தான் நாட்டின் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தமிழ் மக்கள் தெரிவிக்கும் கருத்தில் நூறு வீதம் உண்மை உண்டு.

அதேவேளை, ஆட்சியாளர்களும் போரைப் பயன்படுத்தி நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடித்துவிட்டு நாட்டைக் கையேந்தும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள் என்றும், பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியாளர்களே முழுப் பொறுப்பு என்றும் தமிழ் மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டையும் எவரும் புறம் தள்ள முடியாது - என்றார்.

## வவுனியாவில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுள்ளனர். வவுனியா தெற்கு சிங்கள கோட்ட பிரிவுக்குட்ப போகஸ்வேவ மகா வித்தியாலயத்தில் இன்று காலை பிரார்த்தனையின் போது காற்றின் காரணமாக மரம் ஒன்றில் காணப்பட்ட குளவிக்கூடு கலைந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர் மீது தாக்கியுள்ளது.

இதனால் பாதிப்படைந்தவர்களில் 17 மாணவர்கள் பதவியா பிரதேச வைத்தியசாலையிலும், 8 ஆசிரியர்கள், 12 மாணவர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும், 3 மாணவர்கள் மடுகந்த பிரதேச வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (100)

## கொழும்பு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாகியுள்ளன. இந்தக் கலந்துரையாடல் நேற்று தொலைபேசி வாயிலாக இடம்பெற்றுள்ளது என்று சிங்கள ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்போது நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் கூட்டணியை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்பது தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிக்கின்ற அல்லது விமர்சித்தவர்களுக்கும், கட்சியை விட்டு விலகிச் சென்ற எந்தவொரு நபருக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் வேட்புமனுவை வழங்காதிருப்பதற்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விமர்சித்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் வேட்புமனுவுக்கான சந்தர்ப்பத்தை வழங்காதிருக்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து கூட்டணியாகத் தேர்தலில் களமிறங்கும் பட்சத்தில், கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஒதுக்கீட்டு அடிப்படையிலேயே வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனக் கலந்துரையாடலின் போது தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை 2.30 மணியளவில் புகுந்த காட்டு யானை வீட்டிலிருந்து வெளியே வந்தவரைத் தாக்கியதில் அவர் சாவடைந்தார்.

முனைத்தீவு பிரதான வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய காளிக்குட்டி சங்கரப்பிள்ளை என்பரே உயிரிழந்தார்.

இதன்போது காட்டு யானை வீட்டின் பகுதிகளையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது. இந்தக் காட்டு யானையின் அச்சுறுத்தல் காரணமாக அதிகாலை அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வெல்லாவெளிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். மரண விசாரணையைத் தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. போரதீவுப்பற்றுப் பகுதியின் காட்டுப் பகுதியை அண்டிய பகுதிகளில் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வந்த யானைகள், இன்று மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்குள்ளும் புகுந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன என்று மக்கள் கவலை வெளியிட்டனர்.

## திலினி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலினி பிரியமாலியுடன் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் சாட்சிகளை வழங்குவதற்காக அஸாத் ஸாலி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியுள்ளார். காணி ஒன்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப் பெற்ற 80 இலட்சம் ரூபாவைக் குறித்த பெண்ணிடம் முதலீடு செய்தார் என்று வெளியான தகவல்கள் தொடர்பிலேயே அஸாத் ஸாலி சாட்சியம் வழங்குவதற்கு முன்னிலையாகியுள்ளார்.

ஜானகி சிறிவர்தன என்ற பெண்ணின் ஊடாகவே 80 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொடுத்ததாக சிங்கள ஊடகம் ஒன்றிடம் அஸாத் ஸாலி தெரிவித்திருந்தார்.

கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட திலினி பிரியமாலி, எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவருக்கு எதிராக 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடத்துக்குச் சென்ற இந்தியக் கரையோரக் காவல் படைக்குச் சொந்தமான படகு அவர்களை மீட்டு இராமேஸ்வரத்துக்குச் கொண்டு சென்றது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அகதிகள் தற்போது பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்களில் மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் அடங்குகின்றனர்.

அவர்கள் தலைமன்னார், அரிப்பு மற்றும் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தெரியும் ஒளிக்கீற்று

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கி, மீள முடியாமல் தவிக்கும் இலங்கைக்கு ஆறுதல் தரும் சில செய்திகள் கிடைத்து வருகின்றன.

இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் இலங்கை வேண்டி நிற்கின்றது.

அத்தரப்புகள் உதவ முன் வந்தாலும், ஏற்கனவே சர்வதேச சமூகத்திடம் வாங்கிய கடன்களை மீள செலுத்துவதற்கான மறுசீரமைப்பு திட்டம் ஒன்றை – சாத்தியமான ஏற்பாடு ஒன்றை – செய்து கொண்டு வாருங்கள் என அத்தரப்புகள் இலங்கையைக் கோருகின்றன.

அகோரிக்கையில் நியாயம் உண்டு. செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைக் கட்டணம் கழுத்து வரை இறுக்கியிருக்கையில் பொருளாதார மீட்சிக்காகக் கிடைக்கக்கூடிய புதிய கடன் உதவிகளும் வரவுகளும் ஏற்கனவே கழுத்தை நெரித்து நிலுவையாக நிற்கும் அந்தக் கடன் தவணைக் கொடுப்பனவுகளை கட்டவே சரியாகிவிடும். அப்படியானால், உதவிகள் கிட்டியும் நாடு மீள முடியாத நிலையே நீடிக்கும்.

அதனால்தான் முதலில் கடன் வழங்கிய நாடுகளுடன் பேசி, அவற்றைத் தாஜா செய்து, கடன் மீளளிப்புக்கான புதிய மறுசீரமைப்புத் திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்திக் கொண்டு வாருங்கள் என்று சர்வதேச நாணய நிதியமும் சர்வதேச சமூகமும் இலங்கையை நிர்ப்பந்தித்து வருகின்றன.

சீனா, ஜப்பான், இந்தியா போன்றவையே இலங்கைக்குக் கடன் வழங்கி அதிக தொகையை கடன் நிலுவைக் கட்டணமாக எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

இவற்றுடன்தான் இலங்கை பிரதானமாகப் பேச வேண்டியுள்ளது. காலம் தாழ்த்திக் கடன் தவணைப் பணத்தை மீளச் செலுத்துவதற்கான மாற்று ஒழுங்குகளை இந்த நாடுகளுடன்தான் இலங்கை இப்போது செய்ய வேண்டியிருக்கிறது.

இதில் அதிக விட்டுக்கொடுப்புகளுக்கு தயார் என்று ஏற்கனவே இந்தியா கோடி காட்டிவிட்டது.

சீனாவும் ஜப்பானும்தான் சமாளிக்க வேண்டிய தரப்புகளாக இருந்தன.

ஜப்பான் இணங்கி வந்தாலும், சீனா அசையாத – இறுக்கமான –நிலைப்பாட்டையே வெளிக்காட்டி வந்தது. அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஓர் இணக்கப்பாட்டு உதவி திட்டத்திற்கு இலங்கை செல்வதும் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தது.

இப்போது சீனா இணங்கி வருவதான செய்தி ஒன்றை இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இதே நேரம் கடன் வழங்கும் 22 நாடுகளின் கட்டமைப்பான 'பரிஸ் கிளப்' அமைப்பு, இலங்கை இந்தக் கடன் நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான கடன் மீள் செலுத்துகை தொடர்பான மறுசீரமைப்பு திட்டத்திற்கு முழு உதவி, ஒத்துழைப்பு நல்குவதாக அறிவித்திருக்கின்றது.

பொருளாதார மீட்சிக்கான நெடும் பயணத்தில் ஓர் ஒளிக்கீற்று தென்படும் சூழலாக இந்த நிலைமையை நோக்க முடியும்.

# தேர்தலை எதிர்கொள்வதற்கு பெரமுன தயாராகவேயுள்ளது!

## மஹிந்தானந்தவும் திட்டவட்டக் கருத்து



எந்நேரத்தில் வேண்டுமானாலும், தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது என்றும் நாவலப்பிட்டிய தொகுதியிலும் வெற்றிக்கொடி பறக்கும் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் ஏற்பாட்டில் பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டிய தொகுதி ஆசனக் கூட்டம் கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியமஹிந்தானந்தஅளுத்கமகே–

இன்று நடைபெறும் கூட்டம் மாவட்டக் கூட்டம் அல்ல, ஒரு தொகுதி கூட்டமாகும். ஆனாலும் மக்கள் அணிதிரண்டுள்ளனர்.

தாங்கள் இன்னமும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன்தான் நிற்கின்றோம் என்ற தகவலை அவர்கள் வழங்கியுள்ளனர். ஒரு சிலர் எம்மைவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் மக்கள் சக்தி பலமாகவே உள்ளது.

நாவலப்பிட்டியவில் நடைபெறும் கூட்டத்தை குழப்ப வேண்டும், மக்களின் வருகையைத் தடுக்க வேண்டும் என்பதற்காக நாவலப்பிட்டியவில் எதிர்ப்பு போராட்டத்தை நடத்துமாறு தொகுதி அமைப்பாளருக்கு ஆணையிட்டுள்ளனர்.

சமூகவலைத்தளங்களிலும் பாரிய பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், 148 பேர் மட்டுமே போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். கண்டியில் இருந்தும் ஆள்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்கு அஞ்சும் கட்சி எமது கட்சி அல்ல. எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். கண்டி மாவட்டமும், நாவலப்பிட்டிய தொகுதியும் தயார் என்ற செய்தி இந்தக் கூட்டம்மூலம் வழங்கப்படுகின்றது. தேர்தல் நடத்தப்பட்டால் வெற்றி நிச்சயம் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவருகின்றன. சவால்களை ஜனாதிபதி சிறப்பாக எதிர்கொள்கின்றார். அடுத்த இரு வருடங்களுக்கு அவருக்கு ஆதரவு வழங்கப்படும். தவறுகளை திருத்திக் கொண்டு எமது கட்சி வெற்றிநடைபோடும். – என்றார்.

# அரசின் உணவு பாதுகாப்பு திட்டத்துக்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சிகள் இணக்கம்!

## ஜனாதிபதி கூறுகிறார்



அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் அல்லது விவாதங்களைவிட நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் நெருக்கடியான சூழ்நிலைகளைத் தணிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றரத காலத்துக்குரியது என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு வாக்குவாதம் செய்வதில் பிரச்சினை இல்லை என்றும் தெருவுக்கு வந்தால் ரத்தம் சிந்த நேரிடும் என்று சிலர் சொல்கிறார்கள், இரத்தம் சிந்துவதற்கு முதல் நீங்கள் வாழ வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு உணவு வழங்கும் முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் இரத்தம் சிந்துவதற்கு அன்றி பட்டினியில் சாகவே நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த விவசாயிகளும் உழைக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பற்றி பேச வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் பேசுமாறு அதற்குதான் நாடாளுமன்றம் உள்ளதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே சமயம் சுற்றுலா பயணிகளை இங்கு அழைத்து வர முயற்சிக்க வேண்டும் என்றும் இந்தப் பணியை முறையாகத் தொடர்வோம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு மாகாண 156 ஆவது பொலிஸ் தின நிகழ்வு அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டது



56 ஆவது கிழக்கு மாகாண பொலிஸ் தின நிகழ்வு சனிக்கிழமை அம்பாறை நகர சபை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாட்டிற்காக உயிர்நீத்த பொலிஸாருக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு பொலிஸ் மரியாதை அணிவகுப்பும் இடம்பெற்று இருந்தது.

இதேவேளை ஆண், பெண் பொலிஸாரின் மரியாதை அணி வகுப்பும் , விசேட அதிரடிப்படையினரின் மோட்டார் சைக்கிள் நிகழ்வுகள், மோப்ப நாய்களின் சாகசங்கள், வர்ண வானவேடிக்கை உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, கந்தளாய், பிரதி பொலிஸ் மா அதிபர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் அம்பாறை ,மட்டக்களப்பு, திருகோணமலை, அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட கிழக்கு மாகாண முப்படை உயரதிகாரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு

திங்கட்கிழமை
17.10.2022

# ஈரான் சிறையில் தீ விபத்து உடல்கருகி நால்வர் சாவு



டெஹ்ரான், ஒக்.17

ஈரானிலுள்ள மிகப்பெரிய சிறைச்சாலை ஒன்றில் கைதிகளுக்கிடையில் மோதலையடுத்து ஏற்பட்ட தீவிபத்தில் நான்கு சிறைக்கைதிகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானின் புறநகர் பகுதியான எவின் என்கிற இடத்தில் உள்ள மிகப்பெரிய சிறைச்சாலையில் பெரும்பாலும் அரசு எதிர்ப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டுக் கைதிகள் அடைத்து வைக்கப்படுகின்றனர். இந்த நிலையில் இந்தச் சிறையில் நேற்று முன்தினம் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. சிறையில்ச்கைதிகள் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதலின் போது அங்குள்ள துணிக் கிடங்கில் தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது. திடீரென பற்றி எரிந்த தீ கண்இமைக்கும் நேரத்தில் சிறைச்சாலை முழுவதும் பரவியதாகவும், இதில் வானுயரத்துக்குக் கரும்புகை மண்டலம் எழுந்ததாகவும் கூறப்படுகின்றது.

கைதிகள் இடையிலான மோதல் மற்றும் அதை தொடர்ந்து ஏற்பட்ட பயங்கர தீ விபத்தால் சிறையில் பெரும் பதற்றம் உருவானது.

இதற்கிடையில் சிறையில் தீப்பற்றி எரியும் தகவல் வேகமாக பரவியதைத் தொடர்ந்து, சிறைக்கு வெளியே பெரும் கூட்டம் திரண்டதுடன், அவர்கள் சிறைக்குள் துப்பாக்கி மற்றும் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டதாகக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினர்.

இதனிடையே சிறை அதிகாரிகள் அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர் எனவுன் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இந்த விபத்தில் சிக்கி 4 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தமையுடன் மேலும் அறுபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

## ஆஸ்திரேலியாவில் அவசரகால நிலை: கனமழையால் இயல்புநிலை பாதிப்பு!

தென்கிழக்குஆஸ்திரேலியாவில் கடந்த சில நாள்களாகப் பெய்த கனமழையால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். அதனால் அங்கு அவசர காலநிலை அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில், கடந்த இரண்டு வருடங்களில் பலத்த மழையால் பலமுறை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான விக்டோரியாவில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. புறநகர்ப் பகுதிகளில் தெருக்களில் விடப்பட்ட கார்கள் வெள்ளத்தால் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். விக்டோரியாவின் தெற்கே உள்ள ஒரு தீவு மாநிலமான டாஸ்மேனியாவின் வடக்குப் பகுதிகளும் வெள்ளத்தால்பாதிக்கப்பட்டன. அதே நேரத்தில் கன மழை காரணமாக 120 சாலைகள் மூடப்பட்டன. கனமழை காரணமாகவெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள மக்கள் மிகவும் பதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## மெக்ஸிக்கோவில் நேற்று பன்னிருவர் சுட்டுக்கொலை





மெக்ஸிக்கோ,ஒக்.17

மெக்ஸிக்கோவில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 12பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மெக்ஸிக்கோ, குவானாஜுவாட்டோ மாகாணத்தில் ஈராபுவாட்டோ நகரில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தினுள் மர்ம நபர்கள் திடீரென உள்ளே புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 6 பேர் ஆண்கள் மற்றும் 6 பேர் பெண்கள் ஆவர். மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

தகவலறிந்த பாதுகாப்புப் படையினர் உடனே சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் தேடும் முயற்சிகள் நடந்து வருகிறன என அதிகாரிகள் தெரிவித்தனர்.


கடந்த ஒரு மாதத்துக்கு முன் தென்மேற்கு மெக்சிகோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் அந்தப் பிரதேச நகர மேயர் உள்பட 18 பேர் கொலை செய்யப்பட்டனர். அமெரிக்கக் கண்டத்தில் தொடர்ந்தும் பல பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையுடன், தொடர்ந்தும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சீன அதிபர் ஜீ ஜின்பிங் ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பாரா? ஆரம்பித்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டிலேயே முடிவு

உலக அளவில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சீனாவின் ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், மாநாட்டில் சீன அதிபர் ஜீ ஜின்பிங் மீண்டும் அதிபராகத் தேர்வு செய்யப்படுவாரா என்கிற எதிர் பார்ப்பு எழுந்துள்ளது.

சீனாவின் அரசியல், பொருளாதார ஆதிக்கம் கடந்த 10 ஆண்டுகளில் பன்மடங்காக அதிகரித்திருக்கின்றதுடன், இதற்கு காரணமாக அந்த நாட்டின் அதிபர் ஜின்பிங் கருதப்படுகின்றார். இவர் சீனாவின் அதிபராக கடந்த 2013 ஆம் ஆண்டு பதவியேற்றார். அதைத் தொடர்ந்து, நாட்டின் முன்னேற்றத்துக்காக பல்வேறு புதிய சட்ட திட்டங்களையும், பல்வேறு துறைகளில் மாற்றங்களையும் கொண்டுவந்து, நவீன சீனாவை கட்டமைத்திருந்தார். இவரது ஆட்சியில் சீன பொருளாதாரம் அசுர வளர்ச்சி கண்டது. இதையடுத்து, கடந்த 2018 ஆம் ஆண்டு நடந்த ஆளும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் உச்சி மாநாட்டில் ஜின்பிங் 2 ஆவது முறையாக அதிபராகத் தேர்வுசெய்யப்பட்டார்.

சீன அரசமைப்புச் சட்டத்தின்படி ஒருவர் தொடர்ந்து 2 முறை மட்டுமே அதிபராக இருக்க முடியும் என்கிற வரம்பு இருந்து வருகின்ற நிலையில், ஜின்பிங் 2 ஆவது முறையாக அதிபராக பதவியேற்ற அதே ஆண்டு அதிபர் பதவிக்கான 10 ஆண்டு கால வரம்பு, சட்டபூர்வமாக நீக்கப்பட்டு, அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஜின்பிங்கை 3 ஆவது முறையாக அதிபர் பதவியில் தொடர வழிவகுக்கும் தீர்மானமும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் உயர் அதிகாரம் படைத்த மத்திய குழுவால் நிறைவேற்றப்பட்டது.



ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஆளும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் உச்சி மாநாட்டில் ஜின்பிங் 3து முறையாக அதிபராக தேர்வு செய்யப்படுவார் என தகவல்கள் வெளியாகின. இதனால் அப்போதில் இருந்தே இந்த மாநாட்டின் மீது மிகுந்த எதிர்பார்ப்புகள் எழுந்தன. இந்த நிலையில் அத்தகைய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆளும் சீன கம்யூனிஸ்டு கட்சியின் உச்சி மாநாடு நேற்றுத் தொடங்கியது. தலைநகர் பீஜிங்கில் கட்சியின் பொதுச்செயலாளரும், நாட்டின் அதிபருமான ஜின்பிங் இந்த மாநாட்டை தொடங்கி வைத்தார்.

ஒரு வாரம் நடைபெறும் இந்த மாநாட்டில் கட்சியின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழு ஜின்பிங்கை 3ஆவது முறையாக அதிபராகத் தேர்வு செய்யும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. தற்போது 69 வயதாகும் ஜின்பிங், தனது ஆயுள் முழுவதும் சீனாவின் அதிபராக நீடிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையேமாநாட்டைதொடங்கிவைத்து உரையாற்றிய ஜின்பிங், ஹொங்கொங் மற்றும் தைவான் விவகாரம், கொரோனா தொற்றை ஒழிக்கும் கொள்கை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து காரசாரமாக பேசினார். ஹொங்கொங்கில் நிலைமைமுற்றிலுமாக மாறிவிட்டது. வெறும் குழப்பத்தில் இருந்த ஹொங்கொங் பெரிய மாறுதலைச் சந்தித்துள்ளது. இப்போது அது சீன அரசின் ஒரு பகுதியாக உள்ளது.

அதேபோல், தைவான் பிரச்சினையில் பிரிவினைவாதிகளை முறியடித்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டை வீழ்த்துவதில் சீனா உறுதியாக இருக்கிறது. மேலும், தைவானை சீனாவுடன் ஒருங் கிணைப்பதில் நாங்கள் அமைதியான வழியில் செல்வோம். இருப்பினும் தேவைப்பட்டால் படை பலத்தை பயன்படுத்த ஒரு போதும் தயங்க மாட்டோம். கொரோனா கட்டுப்பாடுகளைப் பொறுத்தவரை சீனாவின் பூச்சிய சகிப்பு தன்மை கொள்கை பெரும் விமர்சனங்களுக்கு உள்ளானது. சீனாவைப் பொறுத்தவரை மக்களும், அவர்களின் உயிரும் நலனும் தான் முதலில் முக்கியத்துவம் பெற்றவை. பூச்சிய சகிப்பு தன்மை கொள்கை மூலம் சீனாபெருந்தொற்று காலத்தில் மக்களின் உடல்நலனை சிறப்பாக பேணியது. பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சீனா சிறப்பாக செயல்பட்டுள்ளது. உலகத்தரம் வாய்ந்த இராணுவத்தைக் கட்டமைப்பதில் சீனா எப்போதும் அதிக கவனம் செலுத்தும் என்று அவர் உரையில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காங்கிரஸ் தலைவர் யார்? ஆரம்பமானது வாக்கெடுப்பு








புதுடெல்லி,ஒக்.17

நாட்டின் பழமையான கட்சி என்ற பெருமைக்குரியது காங்கிரஸ் கட்சியில் அந்த கட்சியின் தலைவர் தேர்தலுக்காக . 6 ஆவது முறையாக போட்டி ஏற்பட்டிருக்கின்றது. இந்த தேர்தலில் காந்தி-நேரு குடும்பத்தைச் சேர்ந்த சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி என யாருமே போட்டியிடவில்லை.


24 ஆண்டுகளுக்கு பிறகு அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் இன்றைய தேர்தல் மூலம் தலைவர் நாற்காலியை அலங்கரிக்க இருக்கின்றார் என்கின்ற செய்திகள் வெளியாகியுள்ளன. காங்கிரஸ் கட்சியின் தலைமை பதவிக்கான தேர்தலில் கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜீன கார்கே மற்றும் சசி தரூர் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல் இன்று காலை ஆரம்பித்துள்ளது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கான வாக்குபதிவு சென்னையில் சத்தியமூர்த்தி பவனில் தொடங்கியது.

காங்கிரஸ் மூத்த தலைவரும், எம்.பி.யுமான ப. சிதம்பரம் தனது வாக்கினை செலுத்தினார் தமிழ்நாட்டில் இருந்து மொத்தம் 211 கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்க தகுதியானவர்கள். சத்தியமூர்த்தி பவனில் 4 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் காங்கிரஸ் இடைக்கால தலைவர் சோனியா காந்தி மற்றும் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி வாக்களித்தனர்.

## தமிழக சட்டசபையில் மாற்றம் ஏதுமில்லை: எதிர்கட்சி துணைத் தலைவராக ஓ.பி.எஸ்.!



சென்னை, ஒக்.17

பல பிரச்சினைகளுக்கு இடையே எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் ஆகியுள்ளமையுடன் சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவராகவும் நீடிக்கிறார். அதே சமயம் ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் இருந்து நீக்கப் பட்டமையுடன் அவரது சட்டமன்ற எதிர்க்கட்சி

துணைத்தலைவர் பதவியும் பறிக்கப்பட்டது. அவருக்கு பதிலாக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் எதிர்க்கட்சி துணைத்தலைவராக எடப்பாடி பழனிசாமி ஆதரவு அ.தி.மு.கழக எம்.எல்.ஏ.க்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுதொடர்பாக சபாநாயகரிடம் எடப்பாடி பழனிசாமி தரப்பில் கடிதம் அளிக்கப்பட்டது. ஆனால் அதே சமயம் கட்சி பதவி தொடர்பான வழக்கு நீதிம்ச்ன்றத்தில் விசாரணையில் இருப்பதால் எதிர்க்கட்சி துணைத்தலைவர் பதவி தொடர்பாக எந்தவ்முடிவும் எடுக்கக்கூடாது என்று சபாநாயகர் அப்பாவுவிடம் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் முன்கூட்டியே கடிதம் அளிக்கப்பட்டது. இந்த இருதரப்பு

கடிதங்களையும் பரிசீலித்து வருவதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் இன்று தமிழக சட்டசபை கூடுகிறது. எதிர்க் கட்சிதுணைத்தலைவர்பதவியில்ஓ.பன்னீர்செல்வம் நீடிப்பாரா? சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி அருகில் இருக்கும் இருக்கையில் ஓ.பன்னீர்செல்வம் அமர முடியுமா என்ற பல கேள்விகள் எழுந்த நிலையில், சட்டசபையில் ஓ.பன்னீர் செல்வம் இருக்கைகள் மாற்றப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இதேபோன்று, ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன் ஆகியோரது இருக்கைகளும் மாற்றப்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது. இதனால் மூலம் தமிழக சட்டசபையில் ஓ.பன்னீர்செல்வம் எதிர்கட்சி துணைத்தலைவராக நீடிப்பார் எனத் தெரிவிக் கப்படுகின்றது. எனினும், அ.தி.மு.கவின் உள்கட்சிப் பிரச்சினை காரணமாக எடப்பாடி பழனிச்சாமி தரப்பு எம்.எல்.ஏக்கள் கூட்டதில் பங்கேற்கவில்லை. ஆனால், ஓ.பன்னீர் செல்வம் தரப்பினர் கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில்,சட்டப்பேரவையின் முதல்நாள் நடவடிக்கையில் மறைந்த உறுப்பினர்கள், தலைவர்களுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து, சட்டசபை நாள் முழுதும் ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார். மீண்டும் சட்டப்பேரவை நாளை காலை 10 மணிக்கு கூடும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

## துபாயிலிருந்து தங்கம் கடத்தல் பெங்களூரில் வசமாக மாட்டியது

துபாயில் இருந்து பெங்களூர் விமான நிலையத்திற்கு பார்சல் மூலம் கடத்திய பன்னிரண்டு லட்சம் லட்சம் ரூபா தங்கம் மீட்கப்பட்டுள்ளதுடன் தங்கத்தினைக் கடத்தியவர்கள் எனக் கூறப்படும் தலைமறைவாகி விட்ட மர்மநபர்களைப் பொலிஸார் வலைவீசித் தேடிவருகிறார்கள்.

பெங்களூர் கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு வெளிநாடுகளில் இருந்து தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்ததை யடுத்து, வெளிநாடுகளில் இருந்து வந்த விமானங்களில் பயணிகளிடமும், அவர்களது உடைமைகளையும் சுங்கத்துறை அதிகாரிகள், பொலிஸார்சோதனை நடத்தினார்கள். ஆனால் எந்த பயணிகளிடம் இருந்தும் தங்கம் கிடைக்கவில்லை. இந்த நிலையில், விமான நிலையத்திற்கு துபாயில் இருந்து வந்த விமா னத்தில் 2 பார்சல்கள் வந்திருந்தன. அந்த பார்சல்கள் மீது சுங்கத்துறை அதிகாரிகள் மற்றும் விமான நிலைய பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டு அந்த பார்சல்களைப் பிரித்து பார்த்த போது, அதற்குள் சிறுவர்களுக்கான ஆடைகள் இருந்தன. மேலும் அவற்றுக்குள் தங்கம் இருந்ததையும் அதிகாரிகள் கண்டு பிடித்தார்கள்.

குறித்த இரண்டு பார்சல்களிலும் ஆடைகளுக்குள் மறைத்து வைத்து 244 கிராம் தங்கத்தை மர்மநபர்கள் கடத்தி இருந்தார்கள். அவற்றின் மதிப்பு பன்னிரண்டு லட்சம் ரூபா ஆகும். அந்த தங்கத்தை பொலிசார் மீட்டுள்ளனர். துபாயில் இருந்து சிறுவர்களுக்கான ஆடைகளில் வைத்து மர்மநபர்கள், பெங்களூருக்கு தங்கத்தை கடத்தியது தெரியவந்துள்ளது.

அந்தப் பார்சல்களில் இருந்த முகவரி மூலமாக மர்ம நபர்களைப் பிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## பென்சிலின் முனையில் தத்ரூபமாக மாமன்னர் ராஜராஜ சோழன் உருவம்

### தஞ்சாவூரில் பட்டதாரி வாலிபர் அசத்தல்

தஞ்சை அருளானந்தம் நகரை சேர்ந்தவர் சவித்ரு (வயது 30) . பி.டெக்கில் ஆடை வடிவமைப்பாளர் பட்டப்படிப்பு படித்துள்ளார். சிறு வயது முதலே சிற்பக்கலை மீது ஆர்வம் உடையவர். படிக்கும் காலத்திலேயே நேரம் கிடைக்கும் போதெல்லாம் சோப்பு, பென்சில், களிமண் உள்ளிட்ட பொருட்களில் சிற்பம் வடிவமைத்து வந்தார். எழுதுவதற்கு பயன்படுத்தும் பென்சிலில் மட்டும் 400க்கும் மேற்பட்ட சிற்பங்கள் செய்துள்ளார். சுதந்திர போராட்ட வீரர்கள், பறவைகள், விலங்குகள், நடனம், இயற்கை காட்சிகளையும் சிறிய பென்சில் மூலம் வடிவமைத்து உள்ளார். இந்த நிலையில் இவர் வரலாற்று காவியமான பொன்னியின் செல்வன் நாவல் படித்தார். அதில் ராஜராஜசோழன் வரலாறு உள்ளிட்ட பல்வேறு பொக்கி தகவல்களை தெரிந்து கொண்டார். செவி வழி செய்தியாக மட்டுமே ராஜராஜ சோழன் வரலாறு அறிந்திருந்த சவித்ரு பொன்னியின் செல்வன் நாவல் படித்த பிறகு ராஜராஜ சோழன் பெரிய கோவில் கட்டிய விதம், அவரது ஆட்சியின் சிறப்பு உள்ளிட்ட பல்வேறு அரிய தகவல்களை தெரிந்து கொண்டார். இதன் தாக்கத்தால் பென்சில் முனையில் ராஜராஜ சோழனாகிய பொன்னியின் செல்வன் உருவத்தை செதுக்க ஆரம்பித்தார். 21 நாள்கள் அங்குலம் அங்குலமாக ரசித்து படத்துக்கு உயிரோட்டமான உருவம் கொடுத்தார். முடிவில் தத்ரூபமாக ராஜராஜசோழன் உருவத்தை பென்சில் முனையில் கொண்டு வந்தார். இதனை அறிந்த வரலாற்று ஆய்வாளர்கள், சமூக அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பென்சில் முனையில் வரையப்பட்ட மாமன்னர் உருவத்தை பார்த்து ரசித்தனர். சவித்ருவை பாராட்டி அவரை மேலும் ஊக்கப்படுத்தினர்.





பென்சில் முனையில் தத்ரூபமாக செதுக்கப்பட்ட ராஜராஜ சோழன் உருவம் – பென்சில் முனையில் ராஜராஜ சோழன் உருவத்தை செதுக்கும் சவித்ரு.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# பாலை விடவும் தண்ணீரின் விலை அதிகம் கிழக்குப் பாற் பண்ணையாளர்கள் விசனம்





ஒரு லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 160 ரூபா என்றும் ஆனால் ஊரில் ஒரு லீற்றர் பாலின்விலை 110 ரூபா என்றும் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கணேசபுரத்தில் இயங்குகின்ற பிள்ளையார் பாற் பண்ணையாளர்கள், இச்சூழலில் தம்மால் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாமலுள்ளது என்றும் கவலை தெரிவித்தனர்.

அப்பகுதி பாற்பண்ணையாரள்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் மேற்படி பாற்பண்ணையில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் 10 தொடக்கம் 20 லீற்றர் பால் கறக்கும் மாடுகளை வளர்த்து வந்த எமது பண்ணையாளர்கள், தற்போது அனைத்து கால்நடை தீவினங்கள் மற்றும் மருந்துப் பொருள்களின் அதிக விலையேற்றம் காரணமாக மாடுகளை விற்பனை செய்து கொண்டு வருகின்றார்கள்.

”இதனால் எமது பகுதியில் பாலுற்பத்தி மிக வேகமாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது. எமது பண்ணையில் எமது பகுதியிலிருந்து நாளாந்தம், மார் 500 லீற்றல் பாலைச் சேகரித்து வந்தோம், தற்போதைய நிலையில் 200 க்கும் குறைவான லீற்றர் பால்தான் ஒரு நாளைக்குச் சேகரிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டனர்.

‘‘தற்போது எமது பண்ணையாளர்கள் மாடு வளர்ப்பை தொடர்ந்து மேற்கொள்வதா கைவிடுவதா என்ற நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்தகாலங்களில்மாடுகளுக்குரியஉணவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருக்கவில்லை. மாறாக, தற்போது ஒரு லோட் வைக்கோல் 15,000 ரூபா, ஒரு கிலோ தவிடு 120 ரூபா மற்றும் மருந்துகளின் விலைகளும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.

ஒரு லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 160 ரூபா. ஆனால் ஒரு லீற்றர் பாலின்விலை 110 ரூபா. இவ்வாறுதான் நிலமை செல்கின்றது. இச்சூழலில் எம்மால் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியாமலுள்ளது – என்று தெரிவித்தனர்.

கிராமிய பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும், பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம் சொல்கின்றது. ஆனால் அதனை செயல் வடிவில் கொண்டு வருகின்றார்களில்லை. எமக்கு அரசாங்கம் உதவ முன்வராவிட்டால் எமது பகுதியில் பாலுற்பத்தி இல்லாமல் போகும் நிலமை ஏற்படும்.

பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என அரசாங்கம்தெரிவித்தபோது எமது பண்ணையாளர்கள் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று கறவைப் பசுக்களை கொள்வனவு செய்தார்கள். தற்போது பாலுக்கு நியாய விலைய இன்மையால் பெற்ற கடமையும் பண்ணையாளர்கள் மீளச் செலுத்த முடியாத நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதனால் எமது வாழ்வாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதோடு, எமது பின்னைகளின் கல்வி சுகாதாரம், உள்ளிட்ட பல விடயங்களில் பெரும் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் சூழலுக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே அரசாங்கம், பால் விலையைக் குறைந்தது ஒரு லீற்றருக்கு 200 ரூபாய்க்கு மேலாவது அதிகரிக்க வேண்டும், இல்லையேல் நாம் எமது கால்நடைகள் அனைத்தையும் வீதிக்கு இறக்கி மாபெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோம்.

எனவே அரசாங்கம் கால்நடைகளின் மருந்துகள் ஏனைய உணவுப்பண்டங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். அவ்வாறெனில்தான் எமது பகுதியில் பாலுற்பத்தியை அதிகரிக்க முடியுமே தவிர இல்லையேல் நாங்கள் அனைவரும் மாடு வளர்ப்பைக் கைவிட்ட வேண்டிய நிலமை ஏற்படும்.

நாங்கள் எமது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடை வளர்ப்பைக் கைவிடும் பட்சத்தில், அரசாங்கம் எமக்கு மாற்று வாழ்வாதார திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் பின்னிற்கக் கூடாது – எனவும் அப்பகுதி பண்ணையாளர்கள் தெரிவித்தனர்

## அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில் நேற்று மீலாத் தின நிகழ்வில் உலமாக்கள் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான புனித மீலாதுன்நபி விழாவை முன்னிட்டு வருடாவருடம் அக்கரைப்பற்று ஜும்மாப்பெரிய பள்ளிவாசலில் இடம்பெறும் விசேட மௌலீத் இம்முறையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16 ஆம் திகதி) மாலை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் அக்கரைப்பற்று கிளை மற்றும் அக்கரைப்பற்று ஜும்மாப்பெரிய பள்ளிவாசல் இணை ஏற்பாட்டில் அக்கரைப்பற்று உலமா சபை தலைவர் மூத்த உலமா மௌலவி எம்.எம்.லத்திப் தலைமையில் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மௌலவிமார்களின் மௌலித் முழக்கத்துடன் மார்க்க சொற்பொழிவும், மீலாத் தொடர்பிலான விளக்கங்களும், தொடர்ந்து. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புக்கள் தொடர்பிலும் இங்கு உலமாக்களினால் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

நபிகள் காலத்திலும், ஸஹாபாக்கள் காலத்திலும் பள்ளிவாசல்கள் இயங்கிய விதம், ஆத்மீகத்தின் சிறப்புக்கள், பள்ளிவாசல்களை முஸ்லிங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியங்கள் தொடர்பிலும் திக்ர் செய்வது, ஸலவாத் கூறுவதன் நன்மைகள் தொடர்பிலும் இஸ்லாத்திற்கும் சமூகங்களுக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் அக்கரைப்பற்று ஜும்மாப்பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் விளக்கமான உரையொன்றை தனதுரையில் வழங்கினார்

அக்கரைப்பற்று ஜும்மாப்பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகளினால் மூத்த உலமாக்கள் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதேசத்தில் எங்குமில்லாதவாறு உலமாக்கள், அக்கரைப்பற்று ஜும்மாப்பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், மதரஸா மாணவர்கள், ஊர்ப் பிரமுகர்கள், கல்விமான்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் கந்தூரியும் வழங்கி வைக்கப்பட்டது.

## பல்கலைக்குத் தெரிவான மாணவருக்குக் கௌரவம்

### கிண்ணியாவில் நேற்று நிகழ்வு





(ஹஸ்பர்)

கிண்ணியா மற்றும் கந்தளாய் இளங்கலை பட்டதாரிகளின் ஏற்பாட்டில் 2021/2022 ம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம் பெற்றது.

கிண்ணியா ,கந்தளாய் போன்ற தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவ மாணவிகளே இவ்வாறு நேற்று கௌரவிக்கப்பட்டார்கள்.

இதன் போது குறித்த 2022 ம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் பிரதம அதிதிகளால் சின்னம் வழங்கி பெருமைப்படுத் தப்பட்டார்கள். இந்த நிகழ்வில் அதிதிகளாக கிண்ணியா நகர சபை தவிசாளர் எம் எம் நிவாஸ் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் மொஹமட் றிப்தி,அரபு மொழித் துறை விரிவுரையாளர் எம்.ஹபீபுள்ளா ஆகியோரும் பல்கலைக்கழக மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# அரசாங்கம் நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாவை உடன் வழங்குக!




## மட்டக்களப்பு தேசிய நிர்மாண சங்கம் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

இலங்கை அரசாங்கத்தால் நிர்மாண ஒப்பந்தங்களுக்கு வழங்கப்பட்ட முடிவுற்ற வேலைகளுக்கு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கவேண்டிய 7 ஆயிரம் கோடி ரூபாக்களை அரசாங்கம் வழங்க வேண்டும். அல்லது ஒப்பந்தகாரர்கள் வங்கிகளில் ஒப்பந்தத்துக்காகப் பெற்ற கடனை அரசாங்கம் பெறுப்பேற்கவேண்டும் என மட்டக்களப்பு தேசிய நிர்மாண சங்கம் தலைவர் ஆர். புஜந்தரன் தெரிவித்தார்

மட்டக்களப்பு கிழக்கு ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மட்டக்களப்பு தேசிய நிர்மாண சங்கத் தலைவர் ஆர். புஜந்தரன் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 249 ஒப்பந்தகாரர்கள் இருந்தனர் தற்போது 154 பேராகக் குறைந்துள்ளதுடன் தற்போது ஒப்ந்தகாராார்கள் 5 பேர் அளவில் ஒப்பந்தங்களைச் செய்துவருகின்றனர்.

இந்தக் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் கீழ் 6 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். ஆனால் தற்போது 500 பேரளவிலான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இலங்கை பூராகவும் வீதி அதிகார சபையின் ஒப்பந்தங்களின் கீழ் வீதிகளைச் செய்துமுடித்த வேலைகளுக்கு அரசாங்கத்தால் ஒப்பந்தகாரர்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபா பணம் கொடுக்கப்படவேண்டியுள்ளது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முடிக்கப்பட்ட வேலைகள் 200 கோடி ரூபாவும், கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட என்ரிஎஸ் திட்டமான அருகிலுள்ள பாடசாலை என்ற திட்டத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு 5 கோடி ரூபாக்களும். விளையாட்டுத்துறை அமைச்சால் 6 கோடியே 50 லட்சம் ரூபாவும் மற்றும் வேறு நிறுவனங்கள் ஒப்பந்தங்கள் மூலம் 18 கோடியே 50 லட்சம் ரூபா உட்பட 230 கோடி ரூபாக்களை மாவட்டத்தில் முடிக்கப்பட்ட வேலைகளுக்கு ஒப்பந்தகார்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

இந்த முடிக்கப்பட்ட வேலைகளுக்கு அரசாங்கம் பணத்தை வழங்காததால் ஒப்பந்தகாரர்களில் கீழ் வேலை செய்துவந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணம் ஒப்பந்தகாரர்கள் வழங்கததால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே முதலில் அரசாங்கம் இந்த ஒப்பந்தங்களை செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தகாரர்களின் நிலுவை பணத்தை விடுவிக்கவேண்டும்.

அது முடியாதபட்சத்தில் வங்கி மற்றும் பினாஸ் கொம்பனிகள் மூலம் ஏற்படுகின்ற அழுத்தத்தை ஒப்பந்த காரர்களுக்கு குறைக்கவேண்டும்.

அத்துடன் முடிக்கப்பட்ட நிர்மாணத்தின் அளவுக்கு அமைவாக ஓர் ஒப்பந்த காரர் கடன் எடுத்திருப்பாயின் அந்த தொகையையும் அதற்கு செலுத்தவேண்டிய வட்;டியையும் அரசாங்கம் பெறுப்பு எடுக்கவேண்டும் அத்தோடு 10 கோடிக்கு மேற்பட்ட கொடுப்பனவு உள்ள ஒப்பந்த காரர்களுக்கு திறைசேரி முறி வழங்கவை ஏனைய 10 கோடிக்கு உட்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குப் வழங்கவேண்டும்

இந்த நிர்மாண ஒப்பந்தங்கள் நாடு நல்ல நிலையில் இருந்த போது இடம்பெற்றவை. அதன் பின்ன அரசாங்கம் இந்த நிர்மாண ஒப்பந்தத்தில் அதிகமான சட்ட திருத்தங்களை மாற்றி அமைத்துள்ளது. இத அனைத்துக்கும் ஒப்பந்தகாரர்கள் பொறுப்பு அல்ல இவை அனைத்துக்கும் வேலை வழங்குபவர்களான அரசாங்கமே பொறுப்பு.

இலங்கையில் ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கை இல்லை. அண்மை காலமாக கொலை கொள்ளை இடம்பெற்று வருகின்றது.

இதற்குக் காரணம் தொழில் இல்லாததால் அரசாங்கம் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்தால் இந்தக் கொள்ளைகளை குறைக்க முடியும். இதற்கு முதலில் நம்பிக்கையை ஏற் படுத்தவேண்டும்.

எனவே இலங்கையில் எல்லா வளமும் இருக்கின்றது இல்லாத பிரச்சினை நம்பிக்கை. எனவே மானியப் வழங்குவதைவிட அவர் உழைத்த பணம் அவருக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். என்றார்.

# விசேட டெங்குத் தடுப்புப் பணிகள் காரைதீவில் மும்முரமாக ஆரம்பம்!

## கிணறுகளில் மீன்கள் விடும் பணியும் முன்னெடுப்பு





நூருல் ஹுதா உமர்

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் காரைதீவு 12 பிரிவில் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட காரணத்தால் விசேட டெங்கு தடுப்பு பணிகளும் கிணறுகளில் மீன்கள் விடும் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளன்.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர், எமது அலுவலக சுகாதார பணியாளர்கள் வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொண்டபோது அதிகமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, எனவே டெங்கு தொடர்பில் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறும் இரண்டு நாள்களுக்கு மேல் குடம், வாளி மற்றும் நீல நிற பரல்களில் நீரை சேமித்து வைக்க வேண்டாம் எனவும் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒவ்வொரு முறையும் நீர் சேமிக்கும் கொள்கலன்களை பூரணமாக கழுவி சுத்தம் செய்த பின்னரே மீண்டும் நீரை சேகரித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் உங்கள் கிணறு நுளம்பு வளை இடல், நீர் சேமிக்கும் கொள்கலன்கள், மலசலகூட வாளி, சுற்றுப் புறங்களில் நீர் தேங்கும் இடங்களை அவதானியுங்கள். மேலும் அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் பின்வரும் இடங்களில் அதிகமான நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன, குளிர்சாதனப் பெட்டியின் பிற்பக்க நீர் தேங்கும் பகுதிகள், சமயலறையின் சிங் (விஷ்ஜவ) இன் கீழ்பக்க பகுதிகள், கூரையிலிருந்து கசிந்து வரும் மழைநீரை சேகரிக்க வைக்கும் பாத்திரங்கள், குளியலறையில் நீர் சேகரித்துவைக்க பாவிக்கப்படும் வாளிகள், நீர் தேங்கிநிற்கும் பூச்சாடிகள் போன்ற இடங்களில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருக இடமளிக்காமல் சுத்தம் செய்துகொள்ளுங்கள். தொடர்ந்தும் சுத்தம் செய்யத் தவறும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராகக்கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு பிரிவினர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நுளம்புகள தடுப்புப் பிரிவினர்கள், காரைதீவு 12 ஆம் பிரிவு கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை ஊழியர்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து கலந்து கொண்டார்கள்.





# சிறுவர்தினமும் முதியோர்கள் கௌரவிப்பும் கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தில்!

யாழ். கைதடி குமரநகர் சனசமூக நிலையம் நடத்திய சிறுவ தின கலைநிகழ்வும் முதியோர் கௌரவிப்பும் குமரநகர் சனசமூக நிலைய நகுலன் கலையரங்கில் இடம்பெற்றது.

சிறுவர் கழக தலைவர் கி.டிசாந் தலைமையில் இடம்பெற் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகவும் கிராம சேவகர் தனபாலசிங்கம், சமுர்த் உத்தியோகத்தர் அன்ரன் தேவகுமார் மற்றும் சனசமூக நிலை தலைவர் சிவபாதம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவு் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் குமரநகர் கிராமத்தில் உள்ள 70 வயதிற்கு மே ற்பட்ட முதியவர்கள் சிறப்பு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

சிறுவர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதோ சிறுவர் கழக மாணவர்களால் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன

## தொல்லியல்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அது முழுமையாகத் தமிழர்களது இன விகிதாசாரத்தை இல்லாதொழிப்பதற்காக உருவாக்கப்பட்டது. அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

1988 ஆம் ஆண்டு மகாவலி எல் வலயம் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்டு இன்று 34 வருடங்கள் முடிவடைந்திருக்கின்றன. அதில் வவுனியா, முல்லைத்தீவு உள்ளடங்களாக பல பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் தென்பகுதி மக்களுக்கு வழங்கும் செயற்பாடு தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

மகாவலி எல் வலயத்தால் இந்த இரண்டு மாவட்டங்களில் ஒரு தமிழருக்குக் கூட காணி வழங்கப்படவில்லை. எனவே, மகாவலி அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தற்போது ஒரு சாதகமான நிலை உள்ளது. கடந்த காலங்களில் விவசாய அமைச்சர் ஒருவராக இருப்பார். வனஇலாகா, வனஜீவராசிகள் அமைச்சர் வேறு ஒருவராக இருப்பார். ஆகவே, சில விவசாயிகளின் பிரச்சினையில் இரண்டு அமைச்சுக்கள் தொடர்புபட்டிருக்கும். தற்போது ஒரே அமைச்சர். விவசாயம், வனஇலாகா அமைச்சர் இரண்டும் ஒருவரே. அமைச்சர் மகிந்த அமரவீரவே அவர். அதுவும் எப்ப மாறுதோ தெரியாது. விவாசாயிகளின் கோரிக்கையை ஒரு குழுவாகக் கொண்டு செல்லும் போது எமக்கு ஒரு சாதகம் இருக்கின்றது. அவர் ஒரு சில விடயங்களைப் பரிசீலிக்க கூடியவர். இதற்கு ஒரு கூட்டு முயற்சி சாதகமாக அமையும்.

விவசாயத்தையும், கால்நடையையும் பிரித்துப் பார்க்க முடியாது. இந்த விடயங்கள் தொடர்பில் ஒரு கூட்டு முயற்சி எடுக்க வேண்டும். வனவிலங்குகளால் விவசாயத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. செட்டிகுளத்தில் இவ்வாறான அதிக பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குரங்குகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் யானைகளின் செயற்பாட்டாலும் மக்கள் வாழ்வாதாரத்தை இழக்க வேண்டியுள்ளது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தொடர்சியாகக் கதைத்தும் எதுவும் நடக்கவில்லை என்று விவசாயிகள் கூட்டங்களுக்கு வருவதில்லை என நினைக்கிறேன். வனஇலாகா, வனஜீவராசிகள், மகாவலி, தொல்பொருள் திணைக்களம் இந்த நான்கும் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. தொல்பொருள் திணைக்களத்தை ஒரு சில பௌத்த அமைப்புக்கள்தான் வழி நடத்து கின்றன. அமைச்சர் ஏதாவது கதைத் தால் அவரது தொகுதியில் உள்ள பிக்கு அது பற்றி கதைக்க வேண்டாம் என் கின்றாராம். ஆகவே, இன்றைய நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## நாவலப்பிட்டி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சங்க சம்பத் சஞ்ஜீவ உள்ளிட்ட 16 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஒருவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமான சரீரப் பிணையில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் நாவலப்பிட்டியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு தொகுதியினர் நேற்றுக் காலை நாவலப்பிட்டி நகரை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் பல்வேறு கோரிக்கைகளை விடுத்த போதிலும், அதனையும் பொருட்படுத்தாது போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் இந்தச் சந்தேகநபர்கள் 16 பேரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கந்தபுரம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பான கூட்டத்தின் போது அங்கு சென்ற பொதுமகன் ஒருவர் தனது சமுர்த்தி முத்திரை வெட்டப்பட்டமை தொடர்பில் குறித்த பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையுடன் இறுதியில் சமுர்த்தி உத்தியாகத்தர் மீது தாக்குதலையும் மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கந்தபுரம் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் சிவஞானசிங்கம் கபிலன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் மேற்கொண்ட பொதுமகனை வவுனியா - பண்டாரிக்குளம் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தநிலையில், சமுர்த்தி உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு நீதியான தீர்வு கோரி வவுனியா பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பிரதேச செயலக வாயிலின் முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன் பணிப்புறக்கணிப்பிலும் பிரதேச செயலக ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், எமது உத்தியோகத்தர்களை நேர்மையாகக் கடமையாற்றுவதற்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள், அரச அதிகாரிகளின் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம், அரச சுற்று நிருபத்துக்கிணங்க பணிபுரிவதற்கு இடமளியுங்கள் போன்ற வசனங்களை தாங்கிய பாதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## மரத்துடன்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் பிரதேசத்தில் வசிப்பவர்களே இந்தச் சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

விபத்துக்குள்ளானவர்களை காரில் இருந்து வெளியே எடுக்க சுமார் 20 நிமிடங்கள் சென்றன என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

வாரியபொல பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது மூன்று வயது குழந்தையும், ஏனைய இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

குழந்தையின் தாயும் மற்றுமொரு நபரும் படுகாயங்களுடன் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாகொல்லாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெற்றோல்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதன்படி, 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 92 ரக பெற்றோலின் புதிய விலை 370 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, டீசலின் புதிய விலை 415 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பெற்றோலியப் பொருட்களின் விலை அப்படியே இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2022இல் வெளியிடப்பெற்றது.